# நூற்றாண்டைக் கடந்தும் தொடரும் சமூக நீதிக்கான பயணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

நாட்டு விழா. இந்த சிறப்புமிகு விழாவை எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கின்ற என்னுடைய ஆருயிர் சகோதரர், ஒருங்கிணைந்த இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர், வனத்துறை அமைச்சர் பொன்முடி அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, உள்ளிட்ட மாவட்டத்தின் அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுக்கள்.

அமைச்சராக இருக்கக்கூடிய பொன்முடி அவர்கள் மாணவராக திராவிட இயக்கப் பாதையில் நடக்க தொடங்கி, இன்றைக்கும் துடிப்புமிக்க போராளியாக செயலாற்றக்கூடியவர். அவரைப் பற்றி தலைவர் கலைஞர் சொன்னதைத் தான் நான் நினைவுப்படுத்துகிறேன்.

“ஆழ்கடலில் கண்டெடுத்த நன்முத்து பொன்முடி!” அப்படிப்பட்ட நம்முடைய பொன்முடி அவர்களோடு இந்த விழுப்புரம் மாவட்ட முன்னேற்றத்திற்காக பணியாற்றி வரக்கூடிய மாவட்ட ஆட்சியர் பழனி, மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை, பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

### வாழ்நாள் முழுக்க எண்ணி பெருமைப்படக்கூடிய நாள் இந்நாள்!

என் வாழ்நாள் முழுக்க நான் எண்ணி எண்ணி பெருமைப்படக் கூடிய நாளாக இன்றைய நாள் அமைந்திருக்கிறது! ஏனென்றால், மரியாதைக்குரிய ஏ.ஜி அவர்களின் மணிமண்டபத்தை திறக்கும் வாய்ப்பும், பெருமையும் எனக்கு கிடைத்திருப்பதை நினைத்து நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். திராவிட இயக்கத்தின் தலைமகன்களில் ஒருவராக ஏ.கோவிந்தசாமி அவர்கள் இருந்திருக்கிறார்! 2019ஆம் ஆண்டு விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பரப்புரைக்கு நான் வந்தபோது நம்முடைய ‘திராவிட ஆழ்வார்’ ஜெகத்ரட்சகன் அவர்களும், இன்றைக்கு விக்கிரவாண்டி எம்.எல்.ஏ.வாக இருக்கும் தம்பி அன்னியூர் சிவா அவர்கள் என்னை சந்தித்து, ஏ.ஜி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவேண்டும் என்று கோரிக்கை மனு கொடுத்தார்கள். அப்போது தி.மு.க. எதிர்க்கட்சி. கழக ஆட்சி அமைந்ததும் நிச்சயம் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று நான் சொன்னேன். உறுதி அளித்தேன். இதோ... இன்றைக்கு திறந்து வைத்திருக்கிறேன்!

ஏ.ஜி. அவர்களுக்கும், தி.மு.க.வுக்குமான கொள்கை உறவு ஏற்பட்டதை நினைத்துப் பார்க்கிறேன்...

1949இல் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டிருந்தாலும், தொடக்க காலத்தில் தேர்தல் அரசியலுக்கு நாம் வரவில்லை... கழக கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களை தேர்தலில் ஆதரித்தோம். அப்போது, தி.மு.க. கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாக கையெழுத்து போட்டுத் தந்து வெற்றி பெற்று, கழகக் கொள்கைகளுக்காகவும், தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்று சொல்லியும் சட்டமன்றத்தில் தொடர்ந்து முழங்கியவர்தான் ஏ.ஜி. அவர்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிற்கே ஒளி தரும் உதயசூரியன் சின்னத்தில் முதலில் நின்று வென்றவர் நம்முடைய ஏ.ஜி. அவர்கள்!

### மணிமண்டபம் திறந்தது என் வாழ்நாள் பெருமை!

‘கொள்கைக் குன்றம்’ ஏ.ஜி. அவர்களைப் பற்றி நம்முடைய தந்தை பெரியார் என்ன சொன்னார் என்றால்... “மாற்றார் கூட குறை சொல்ல முடியாத அளவுக்கு மிக நேர்மையோடு, ஒழுக்கத்தோடு, நாணயத்தோடு நடந்து கொண்டவர்” என்று சொன்னார். “அடக்கமும் அன்பும் நிறைந்த என் ஆருயிர் தோழர்” என்று தலைவர் கலைஞர் சொன்னார். பேரறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞர் ஆகியோரின் அமைச்சரவைகளில் இடம் வகித்தவர். திடீரென்று அவர் மறைவுற்றபோது தலைவர் கலைஞர் துடித்து போய்விட்டார். அவர் மறைவுக்குப் பிறகு, அவரின் குடும்பத்துக்கு நிதி திரட்டித் தரும் முயற்சியை தி.மு.க. தலைமைக் கழகம் எடுத்தது. அப்படி நிதி திரட்டித் தந்தவர்களில் நானும் ஒருவன்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, சிறுவனாக இருந்தபோது, மாணவப் பருவத்தில் இருந்தபோது, கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பில், சென்னை கோடம்பாக்கத்தில் இருக்கின்ற ராம் தியேட்டரில் நாடோடி மன்னன் படத்தை காலைக் காட்சியாக திரையிட்டு, அதன் மூலமாக கிடைத்த நிதியை நான் கொண்டு சென்று தலைவர் கலைஞரிடத்தில் கொடுத்தேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் இட்ட பணியை தட்டாமல் செய்து முடிப்பதுதான் தன்னுடைய ஒரே வேலை என்று வாழ்ந்த ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு கழக அரசு மணிமண்டபம் அமைப்பதும், அதை நான் திறந்து வைப்பதும் எனக்கு கிடைத்த வாழ்நாள் பெருமை!

அடுத்து, 21சமூகநீதிப் போராளிகளுக்கு நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்ட வன்னிய சமுதாய மக்கள் தங்களின் சமூகநீதி உரிமையைக் கேட்டு அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் போராடியபோது, காக்கை குருவிகளை சுடுவது போல சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 1987ஆம் ஆண்டு இது நடந்தது. வன்னிய சமுதாய மக்களின் கோரிக்கைக்கு அன்றைக்கு அ.தி.மு.க. அரசு செவிமடுக்கவில்லை. 1989ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் தலைவர் கலைஞர், “திமுக ஆட்சிக்கு வந்தால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று தனி ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்வோம்” என்று வாக்குறுதி கொடுத்தார். சொன்னதுபோல், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த 43ஆவது நாளில், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு இடஒதுக்கீட்டை உருவாக்கிக் கொடுத்த வரலாறுதான் கலைஞருடைய வரலாறு! திமுக ஆட்சியின் வரலாறு!

### உயிர்த்தியாகம் செய்த 21 பேரின் குடும்பத்தாருக்கு ஓய்வூதியம்!

13.3.1989 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற முடிவாக, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் 20 விழுக்காடு தனி இடஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு கல்வியில், வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்துப் பிள்ளைகள் படித்து, வேலைக்கு சென்று முன்னேற கலைஞர் கொடுத்த இடஒதுக்கீடு தான் மிக முக்கியக் காரணமாக இருக்கிறது. இது மட்டுமா... உயிர்த் தியாகம் செய்த 21 பேர் குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் கருணைத் தொகையும் மாதந்தோறும் ஓய்வூதியமும் வழங்கியவர் முதலமைச்சர் கலைஞர்.

இன்றைக்கும் அந்தக் குடும்பங்கள் மாதம் 3 ஆயிரம் ரூபாய் பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு சமூகநீதிப் போராளிகள் பட்டமும் வழங்கப்பட்டது.

• அப்போது நடைபெற்ற சாலைமறியலில் கைதான 2 இலட்சம் பேர் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. அதுமட்டுமல்ல,

• குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வன்னியர் சங்க நிர்வாகிகளான பு.தா. அருள்மொழி, பு.தா.இளங்கோவன் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறாரே, வாழைச் செல்வன், ஆரணி ராசேந்திரன், தாராசிங் ஆகிய 5 பேர் மீதான வழக்கும் திரும்பப் பெறப்பட்டது. அதே போல,

• வாழப்பாடி ராமமூர்த்தி, வன்னிய அடிகளார், வன்னியர் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சி.என்.ராமமூர்த்தி ஆகியோர் முதலமைச்சர் கலைஞர் அவர்களை சந்தித்து, மரியாதைக்குரிய எஸ்.எஸ்.ராமசாமிப் படையாச்சியார் அவர்களுக்கு சென்னையில் சிலை வைக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தபோது, அப்போது சென்னைக்கு நான் மேயராக இருந்தேன். என்னிடம்தான் அனுப்பி வைத்தார், முதலமைச்சர் கலைஞர் அவர்கள். சென்னையில் மூன்று இடங்களை குறிப்பிட்டு அவர்கள் என்னிடம் கொடுத்தார்கள். அதற்கு பிறகு முடிவு செய்து, இறுதியாக, சென்னை ஹால்டா சந்திப்பில் ராமசாமி படையாச்சியாருக்கு சிலை அமைக்கப்பட்டது. முதலமைச்சர் கலைஞரும், மேயராக இருந்த நானும் அந்த விழாவில் கலந்துகொண்டோம்.

### 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூ.4 கோடியில் மணிமண்டபம்!

• வன்னியர் பொதுச்சொத்து வாரியம் அமைக்க வேண்டும் என்று வன்னியர் சமூகத் தலைவர்கள், முதலமைச்சர் கலைஞரிடம் அன்றைக்கு கோரிக்கை வைத்தார்கள். 2009ஆம் ஆண்டு அதற்கான ஆணை பிறப்பித்தது கழக அரசு தான். இப்போது,

2021இல் ஆறாவது முறையாக கழக அரசு அமைந்ததும், 1987ல் சமூகநீதிப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன். சொன்னபடியே, இதோ... மணிமண்டபம் கட்டித் திறக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும், பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின - விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை முழுமையாக ஒப்படைத்துக்கொண்ட சமூகநீதிக்கான இயக்கம்.

திராவிட இயக்கம் தோன்றியதே சமூகநீதியை நிலைநாட்டத்தான்! 1921ஆம் ஆண்டே எல்லா சமூகங்களுக்கும் இட ஒதுக்கீட்டு வழங்கியது நீதிக்கட்சி ஆட்சி. இந்த இடஒதுக்கீட்டு முறைக்கு உச்சநீதிமன்றத்தால் ஆபத்து வந்தபோது, கடுமையாக போராடி 1950ஆம் ஆண்டு முதல் அரசியல் சட்டத்திருத்தத்தை செய்ய வைத்தவர்கள் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்!

அதுமட்டுமல்ல, கழக ஆட்சியில் தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 விழுக்காடு இடஒதுக்கீட்டை 31 விழுக்காடாக உயர்த்தினோம். பட்டியலின மக்களின் இடஒதுக்கீட்டை 16 விழுக்காட்டிலிருந்து, 18 விழுக்காடாக உயர்த்தினோம். பழங்குடியினருக்கு 1 விழுக்காடு தனியாக இடஒதுக்கீடு வழங்கினோம். பின்னர், பிற்படுத்தப்பட்டோரில் 20 விழுக்காட்டைப் பிரித்து வன்னியர் சமுதாயம் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோராக அறிவித்து, தனி ஒதுக்கீடு கொடுத்தோம். இஸ்லாமியர்களுக்கு 3.5 விழுக்காடு உள் ஒதுக்கீடும், அருந்ததியினருக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடும் வழங்கினோம்.

### நூற்றாண்டைக் கடந்தும் தொடரும் சமூகநீதிக்கான பயணம்!

அதுமட்டுமல்ல, இன்றைக்கு சமூகநீதி உரிமைகளை அகில இந்திய அளவிலும் கிடைக்க போராடி வருவது திமுக தான். நூற்றாண்டை கடந்த பிறகும், சமூகநீதிக்கான நம்முடைய பயணம் தொடர்கிறது. அதன் அடையாளமாகத்தான் 21சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபமும், ஏ.ஜி. அவர்களுக்கு நினைவு மண்டமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு திறப்பு விழாக்களுடன் நிறைய அரசு திட்டப்பணிகளும் திறக்கப்பட்டிருக்கிறது. அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

இந்த விழுப்புரம் மாவட்டத்திற்கு கழக ஆட்சியில் செய்து தரப்பட்டிருக்கும் ஏற்கனவே செய்திருக்கக்கூடிய சாதனைகள் சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாக சொல்ல விரும்புகிறேன்.

• விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கட்டடத்துடன் கூடிய புதிய கதிரியக்க டெலிகோபால்ட் கருவி, தீவிர சிகிச்சைக்கான கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

• செஞ்சியில் புதிய பேருந்து நிலையம்.

• வானூர் வட்டம் திருவக்கரையில் அருங்காட்சியகம், நூலகம், கலையரங்கம்

• திண்டிவனம் வட்டம் பட்டணத்தில் நவீன பல்வண்ண அச்சுக் குழுமம்

• வெள்ளிமேடு பேட்டை - பாண்டி இருவழிச் சாலை நான்கு வழிச்சாலை,

• ஆபங்குப்பம் - கோனேரிக்குப்பம், ஆவணிப்பூர் இடைவழிச்சாலை இருவழிச் சாலை ஆகியவை அமைக்கப்பட்டிருக்கிறது.

• விழுப்புரம், திண்டிவனம் நகராட்சிப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

• திண்டிவனம் சிட்கோவில் மருத்துவப் பூங்கா

• திண்டிவனம் - மரக்காணம் சாலை நான்கு வழிச்சாலை

• திண்டிவனத்தில் தலைமை மருத்துவமனை கட்டடம்

• தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே இருக்கும் சொர்ணாவூர் அணைக்கட்டு சீரமைப்பு

• செஞ்சி பேரூராட்சியில் குடிநீர் வழங்கல் திட்டம்

• திண்டிவனம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம்

• கெடார் மாதிரிப் பள்ளியில் கட்டடம்

• பிடாரிப்பட்டு அணிலாடி சாலையில் வராக நதி குறுக்கே மேம்பாலம்

• விக்கிரவாண்டியில் இரண்டு நீதிமன்றங்கள் கொண்ட ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

• செஞ்சியில் அரசு ஆதிதிராவிட நலப்பள்ளிக்கான பெண்கள் விடுதி - திண்டிவனத்தில் அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் கல்லூரி விடுதி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, பல்வேறு அணைக்கட்டுகள் புனரமைக்கப்பட்டதால், 19 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றிருக்கிறது.

இப்படி இந்த மாவட்டத்தை முன்னேற்ற நாம் ஏராளமான பணிகளை செய்திருக்கிறோம். நேற்றிரவு மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட மாவட்ட உயர் அதிகாரிகளோடு நடத்திய ஆய்வுக் கூட்டத்தில், நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பணிகள், நடைபெறக்கூடிய பணிகள், இன்னும் நிறைவேற்றப்படக்கூடிய பணிகள் குறித்து ஆய்வு செய்தோம். இந்த மாவட்டத்திற்கான தேவைகளையும் நான் கேட்டுக் தெரிந்து கொண்டேன்.

நமக்கு நிதி ஒன்றுதான் தடையே தவிர, வேறு எந்தத் தடையும் கிடையாது. நிதி இல்லை, நிதி இல்லை என்று புலம்பிக்கொண்டு இருக்காமல், மக்கள் குறைகளை நீக்கிட, அதை நீக்கி, நிறைவேற்றுகின்ற அரசாக தி.மு.க. அரசு இருக்கிறது.

சில எதிர்க்கட்சித் தலைவர்கள் வெறும் குறைகளை மட்டுமே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அது ஆட்சியின் குறை இல்லை, அவர்கள் சிந்தனையில் ஏற்பட்டிருக்கக்கூடிய குறைபாடு! அவர்கள் தானும் நல்லது செய்ய மாட்டார்கள், அடுத்தவர்களையும் நல்லது செய்ய விட மாட்டார்கள். மக்களுக்கு நல்லது நடந்தால் அவர்களுக்குப் பிடிக்காது. அதைப் பற்றி கவலைப்படாமல் நாம் நம்முடைய கடமையை தொடர்ந்து ஆற்றிக் கொண்டு வருகிறோம்.

**இதே விழுப்புரத்தில், பொன்முடி சொன்னாரே மாநாட்டைப் பற்றி.... நான் அரசியல் அதிகம் பேச விரும்பபில்லை. ஒன்றை மாத்திரம் சுட்டிக்காட்டுகிறேன். இதே விழுப்புரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் 2004ஆம் ஆண்டு சொன்னதை நான் இன்னும் மறக்கவில்லை... விழுப்புரத்தில் நடந்த தி.மு.க. மாநாட்டுக்கு முதன்முதலாக நான் தலைமை வகித்தேன். பொன்முடி சொன்னது உண்மைதான். அப்போது தலைவர் கலைஞர் பேசும்போது, எனக்கு ஒரு அறிவுரையைச் சொன்னார்! “நான் என்னுடைய 26ஆவது வயதில் ஒரு மாநாட்டிற்கு தலைமை வகிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். ஸ்டாலினுக்கு அந்த வாய்ப்பு 50ஆவது வயதில்தான் கிடைத்திருக்கிறது. இவ்வளவு தாமதமாக கிடைக்கக் காரணம், எதுவும் அவசரமாக, விரைவாக கிடைப்பதைவிட தாமதமாக கிடைத்தால்தான் அதற்கு வலு அதிகம். அந்த வலு உனக்கு சேர்ந்திருக்கிறது” என்று குறிப்பிட்டார் தலைவர் கலைஞர்.**

**சொல்லிவிட்டு, மற்றொன்றையும் கூறினார். “எல்லோரும் உன்னை அங்கீகரித்ததாக நினைத்து நீ நடைபோடக்கூடாது. எங்கிருந்து உனக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையோ அதை தெரிந்துக் கொண்டு எல்லோரிடமும் அங்கீகாரம் பெறவேண்டும் என்ற அணுகுமுறையை நீ கற்றுக்கொள்ள வேண்டும்” என்று சொன்னார். அந்த அறிவுரையை என் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நெறிமுறையாக கொண்டு செயல்படத் தொடங்கினேன்.**

அதனால்தான் வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்ல - வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து எந்தப் பாகுபாடும் பார்க்காமல் முதலமைச்சராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், ‘நம்பர் ஒன் முதலமைச்சர்’ என்பதைவிட ’நம்பர் ஒன் தமிழ்நாடு’ என்பதுதான் என்னுடைய இலக்கு! அதற்காக தான் இந்தியாவையே திரும்பிப் பார்க்கின்ற திட்டங்களை செய்கிறோம். நம்முடைய திட்டங்களால், இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் பயனடைகின்ற விபரங்களை சொல்கிறேன். கேளுங்கள்.

**• 3 இலட்சத்து 38 ஆயிரத்து 600 சகோதரிகளுக்கு மாதம் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தரப்படுகிறது.**

**• 13 ஆயிரத்து 969 மாணவியர்களுக்கு மாதம் 1000 ரூபாய் புதுமைப்பெண் திட்டத்தில் தரப்படுகிறது.**

**• 9 ஆயிரத்து 798 மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாதம் 1000 ரூபாய் தரப்படுகிறது.**

**• முத்தாய்ப்பாக, 60 ஆயிரம் பள்ளி மாணவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறார்கள். அதுமட்டுமல்ல,**

**• 28 ஆயிரம் பேருக்கு பல்வேறு வகையான பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது.**

**• 3 ஆயிரத்து 337 பேர் கலைஞர் கனவு இல்லம் பெற்றிருக்கிறார்கள்.**

**• முதல்வரின் முகவரி திட்டத்தில் 2 இலட்சத்து 63 ஆயிரத்து 144 மனுக்களைப் பெற்று அதற்கு தீர்வு கண்டிருக்கிறோம்.**

இப்படி ஒவ்வொரு மாவட்டமாக என்னால் சொல்ல முடியும். கட்சி - அரசியல் பாகுபாடுகள் பார்க்காமல் உழைத்தால் கட்சி அரசியல் எல்லைகளை கடந்து மக்கள் ஆதரிப்பார்கள் என்பதை ஒவ்வொரு ஊருக்கும் நான் போகும்போது மக்கள் தரும் வரவேற்பும் - அப்போது அவர்கள் முகங்களில் தெரியும் மலர்ச்சியும் எனக்கு எடுத்துக் காட்டுகிறது.

அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து சமூக வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி என்ற அடிப்படையில், ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற திராவிட மாடல் ஆட்சியை நாம் வழி நடத்திக்கொண்டிருக்கிறோம். மக்களாகிய உங்களின் வாழ்த்துகளோடு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உருவாக்கி வருகிறோம். யாருக்கும் யாரும் அடிமை இல்லை! எல்லார்க்கும் எல்லாம்! இந்த திராவிடக் கருத்தியலை, எந்த சூழலிலும் சமரசம் செய்யாமல் செயல்படுத்திக் காட்டுவது தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய வாழ்க்கைப் பயணம்!

### தமிழ்நாட்டை முன்னிலை படுத்தியே செயல்படுகிறேன்!

என்னைப் பொறுத்தவரை, என்னை முன்னிலைப்படுத்தி நான் எதையும் செய்வதில்லை, தமிழ்நாட்டை முன்னிலைப்படுத்தி தான் நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதனால்தான், நம்முடைய ஆட்சியை, திராவிட மாடல் ஆட்சி என்று நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்கிறேன். இதை “ஸ்டாலின் ஆட்சி” என்று சொல்லி, தற்பெருமை தேடிக்கொள்வதைவிட, தற்பெருமை தேடிக்கொள்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும், ஆனால் தேடிக்கொள்ள விரும்பவில்லை. அந்த குறுகிய சிந்தனை எனக்கு எப்போதும் வந்ததில்லை! வரவும் வராது! ஏன் பல்வேறு விமர்சனம் வந்தாலும், மீண்டும் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி தான் நான் சொல்வேன்.

திராவிடம்தான், நமது தாய் நிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது. திராவிடம்தான், நம்முடைய அன்னைத் தமிழ்மொழிக்கு செம்மொழி தகுதியை பெற்றுத் தந்தது! திராவிடம்தான், பட்டியலின - பழங்குடியின பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு உரிமையை பெற்றுத் தந்தது. திராவிடம்தான், பெண் விடுதலைக்காக போராடியது! பெண்களை படிக்க வைத்தது! திராவிடம்தான் - ஏராளமான கல்லூரிகளை - பல்கலைக் கழகங்களை - மருத்துவமனைகளை - நூலகங்களை உருவாக்கியிருக்கிறது...

மொத்தத்தில் திராவிடம்தான், இந்த நவீன தமிழ்நாட்டை உருவாக்கியது! அது இனியும் தொடரும்! தொடரும்! திராவிடம் இருப்பதால்தான், நாட்டின் பிற பகுதிகளில் இருப்பது போன்று, ஆதிக்க சக்திகளால் - பிற்போக்கு கும்பல்களால் தலை தூக்க முடியவில்லை! அதனால்தான், போலிகள் - துரோகிகள் துணைகொண்டு எதிரிகள் பலமுனை தாக்குதல் நடத்தி, நடத்தி சோர்ந்து போகிறார்கள்.

இன்றைக்கு நாம் பார்க்கின்ற இந்த நவீன தமிழ்நாடு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் - பேரறிஞர் அண்ணாவால் - தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்டது! தமிழ்நாடு இன்றைக்கு எல்லா துறைகளிலும் உன்னதமான இடத்தில் இருக்கிறது என்றால் அதற்கு காரணம், திராவிட மாடல்! இந்த கொள்கை ஆட்சிக்கு - உற்ற தோள் கொடுத்து - உறுதுணையாக இருக்கக் கூடிய, உறவாக இருக்கக்கூடியவர்கள் என்றும் தொடரவேண்டும், தொடரவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ஏ.ஜி.அவர்களின் இனிய பண்பு நலன்கள்!



**1949இல் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டிருந்தாலும், தொடக்க காலத்தில் தேர்தல் அரசியலுக்கு நாம் வரவில்லை... கழக கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களை தேர்தலில் ஆதரித்தோம். அப்போது, தி.மு.க. கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாக கையெழுத்து போட்டுத் தந்து வெற்றி பெற்று, கழகக் கொள்கைகளுக்காகவும், தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்று சொல்லியும் சட்டமன்றத்தில் தொடர்ந்து முழங்கியவர்தான் ஏ.ஜி. அவர்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிற்கே ஒளி தரும் உதயசூரியன் சின்னத்தில் முதலில் நின்று வென்றவர் நம்முடைய ஏ.ஜி. அவர்கள்!**

**‘கொள்கைக் குன்றம்’ ஏ.ஜி. அவர்களைப் பற்றி நம்முடைய தந்தை பெரியார் என்ன சொன்னார் என்றால்... “மாற்றார் கூட குறை சொல்ல முடியாத அளவுக்கு மிக நேர்மையோடு, ஒழுக்கத்தோடு, நாணயத்தோடு நடந்து கொண்டவர்” என்று சொன்னார். “அடக்கமும் அன்பும் நிறைந்த என் ஆருயிர் தோழர்” என்று தலைவர் கலைஞர் சொன்னார். பேரறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞர் ஆகியோரின் அமைச்சரவைகளில் இடம் வகித்தவர். திடீரென்று அவர் மறைவுற்றபோது தலைவர் கலைஞர் துடித்து போய்விட்டார். அவர் மறைவுக்குப் பிறகு, அவரின் குடும்பத்துக்கு நிதி திரட்டித் தரும் முயற்சியை தி.மு.க. தலைமைக் கழகம் எடுத்தது. அப்படி நிதி திரட்டித் தந்தவர்களில் நானும் ஒருவன்.**

## விழுப்புரத்தின் அருமை பெருமைகள்!

**இடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி ஆட்சி செய்த மலையமான் நாடும், வீரத்தின் விளைநிலமான ராஜா தேசிங்கு ஆட்சி செய்த பகுதி இந்த விழுப்புரம் மாவட்டம்! இந்த விழுப்புரத்திற்கு எத்தனையோ இலக்கியப் புகழும் வரலாற்றுப் பெருமையும் இருக்கிறது...**

- **கல்வெட்டுகளுக்கு கல்தொண்டூர்!**
- **குடவரைக் கோயில்களுக்கு மண்டகப்பட்டு!**
- **பழைய கோயில்களுக்கு பனைமலை!**
- **பாறை ஓவியங்களுக்கு கீழ்வாலை!**
- **வரலாற்றுப் பெருமைக்கு திருவக்கரை!**
- **இலக்கியத்துக்கு தண்டபாணி சுவாமிகள்!**
- **நல்லாட்சியின் இலக்கணத்துக்கு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்!**
- **திராவிட அரசியலுக்கு மதிப்பிற்குரிய ஏ.ஜி என அழைக்கப்பட்ட ஏ.கோவிந்தசாமி அவர்கள். இப்படி விழுப்புரம் மண்ணின் பெருமைகளைப் பட்டியலிட்டால் நாளும் பொழுதும் போதாது! அப்படிப்பட்ட இந்த மண்ணில் உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!**